பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

13 06 2025 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அகமதாபாத் விமான விபத்து குறித்து பிரிட்டன், போர்ச்சுக்கல் மற்றும் கனடா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் தாம் பேசி வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
2. விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு உடனடியாக காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்று ஆயுள் காப்பீட்டு நிறுவனம் கூறியுள்ளது.
3. மாநிலங்களவைக்கு அஸ்ஸாம் மாநிலத்தில் இருந்து தேசிய ஜனநாயக கூட்டணியின் இரண்டு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
4. தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் நாளை மிக கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதையடுத்து, பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.
5. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றிபெற 282 ரன் என்ற இலக்கை ஆஸ்திரேலியா நிர்ணயித்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்--</u>

<<<<<>>>>>

அகமதாபாத் விமான விபத்து குறித்து பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு டேவிட் லாமி, போர்ச்சுக்கல் வெளியுறவுத்துறை அமைச்சர் **'Paelo Rangel '**கனடா வெளியுறவு அமைச்சர் **'Anitha Anand '** ஆகியோருடன் இந்தியா தொடர்பில் இருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த மூன்று நாடுகளை சேர்ந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன், அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்துதரப்படும் என்று உறுதியளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அகமதாபாத் விமான விபத்தில் பிரிட்டனை சேர்ந்த 53 பேரும், போர்ச்சுக்கலை சேர்ந்த 7 பேரும், கனடாவை சேர்ந்த ஒருவரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், விபத்துக்குள்ளான ஏர் இண்டியா போயிங் விமானத்தின் கருப்புப்பெட்டி மீட்கப்பட்டுள்ளது.

தடயவியல் ஆய்வுக்காக இதனை புலனாய்வு அமைப்பினர் அனுப்பியுள்ளனர்.

இந்த பெட்டியிலிருந்து, விமானம் பயணித்த தூரம், உயரம், செயல்பாடு மற்றும் விமானிகளின் உரையாடல்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

குஜராத் தீவிரவாத தடுப்புப்பிரிவினர் சம்பவ இடத்திலிருந்து மின்னணு வீடியோ பதிவு கருவி ஒன்றையும் மீட்டுள்ளனர்.

இதிலிருந்து, புலனாய்வுக்கு தேவையான கூடுதல் தகவல்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விபத்துக்கான காரணம் குறித்து புலனாய்வு அமைப்பினர் சம்பவ இடத்தில் தீவிரமாக ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

தடயவியல் நிபுணர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அகமதாபாதில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ஏராளமானோர் ரத்த தானம் செய்ய முன்வந்துள்ளனர்.

இந்திய ராணுவம் இதற்கென சிறப்பு ரத்ததான முகாமுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவ மாநில அரசின் பல்வேறு துறைகள் முன்வந்துள்ளன.

அவர்கள் தங்குவதற்கான விடுதி வசதி, போக்குவரத்து போன்றவற்றுக்கும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளும் விரிவான அளவில் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஏர் இண்டியா விமான விபத்தில் உயிரிழந்தவர்களை அடையாளம் காணுவதற்கான நடவடிக்கைகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

உயிரிழந்தவர்களின் 191 குடும்பத்தினரின் மரபணு மாதிரிகள் இதுவரை எடுக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில், ஐந்து பேரின் உடல்கள் சம்பந்தப்பட்ட குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களை அடையாளம் காணும் பணியில் 70 முதல் 80 மருத்துவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

**'B J '** மருத்துவக்கல்லூரியிலும் டி என் ஏ மாதிரிகளை சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பிரேத பரிசோதனை மற்றும் அடையாளம் கண்பது குறித்த தகவல்களை பெறுவதற்கு இரண்டு உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

6 3 5 7 3 7 3 8 3 1 என்ற எண்ணிலும், 6 3 5 7 3 7 3 8 4 1 என்ற எண்ணிலும் தொடர்புகொண்டு இதுகுறித்த விவரங்களை தெரிந்துகொள்ளலாம் என்று அரசு மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, விமான விபத்தில் உயிரிழந்த குஜராத் முன்னாள் முதலமைச்சர் விஜய் ரூபானியின் குடும்பத்தினரை பிரதமர் திரு நரேந்திர மோடி, நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பல்வேறு சவாலான தருணங்களில் தமக்கு, ரூபானி தோளோடு தோள் நின்று உதவியதாக கூறியுள்ளார்.

ரூபானியின் அப்பழுக்கற்ற அரசியல் வாழ்வையும், பல்வேறு துறைகளில் அவர் ஆற்றிய அரும்பணிகளையும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, இன்று காலை பிரதமர் திரு நரேந்திர மோடி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

<<<<<>>>>>

அகமதாபாத் விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்கான காப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க எல் ஐ சி நிறுவனம் முடிவு செய்துள்ளது.

அந்நிறுவனம் வெளியிட்டுள்ள இதற்கான அறிவிப்பில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நிதிச்சுமையில் இருந்து விரைந்து மீள்வதற்கு ஏதுவாக உடனடியாக காப்பீட்டுத் தொகை வழங்குவதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தோருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாகவும் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் அறிக்கையில் குறிப்பிட்டப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ஏர் இண்டியாவின் போயிங் **787** ரக விமானங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என சிவில் விமான போக்குவரத்தின் தலைமை இயக்குனரகம் உத்தரவிட்டுள்ளது.

இந்த இயக்குனரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அனைத்து விமானங்களையும் ஆய்வு செய்யும் பணிகளை மண்டல அலுவலகங்களோடு இணைந்து உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது.

எரிபொருள் அளவீட்டுக் கருவிகள், மின்னணு இயந்திர கட்டுப்பாட்டு அமைப்பு உள்ளிட்டவைகளை முழு அளவில் கண்காணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விமானம் புறப்படுவதற்கு முன்பு, விமான எரிபொருள் இயந்திரத்திற்கு கிடைப்பதை உறுதி செய்வதற்கான சோதனையையும் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏர் இண்டியாவின் அனைத்து போயிங் விமானங்களையும் 15 நாட்களுக்குள் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை உடனடியாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

மாநிலங்களவைக்கு அஸ்ஸாம் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் இரண்டு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டணியில் இடம்பெற்றுள்ள பிஜேபியை சேர்ந்த **‘Kanad Purayastha ’** –வும், அஸ்ஸாம் கனபரிஷத்தை சேர்ந்த வீரேந்திர பிரசாத் வைஷ்யாவும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் நாளை மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதையடுத்து, அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் லஷ்மி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

மழை மற்றும் கடுமையான காற்று அடிக்கும் நேரத்தில் மரத்தின் அடியில் வாகனங்களை நிறுத்துவதோ அல்லது மக்கள் ஒதுங்கி நிற்பதையோ கண்டிப்பாக தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பேரிடர் மீட்புக்குழுக்கள் தயார் நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நீலகிரி மாவட்டத்தில் நாளை பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>**

பதினோராவது சர்வதேச யோகா தினம் இம்மாதம் 21-ஆம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி, நாளை புதுதில்லியில் "ஒரே பூமி – ஒரே ஆரோக்கியம்" என்ற தலைப்பில் உலக கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

மத்திய ஆயுஷ் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்ச்சியில், உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொள்கின்றனர்.

**<<<<<>>>>>**

இந்தியா – மங்கோலிய இடையேயான 17-ஆவது கூட்டு ராணுவ பயிற்சி இன்று மங்கோலியாவில் **Ulaanbaatar** –ல் நிறைவடைந்தது.

இந்நிகழ்ச்சியில் பேசிய இந்திய பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ்குமார் சிங், **Nomadic Elephant** என்ற கூட்டு ராணுவ பயிற்சியில் இருநாட்டு ராணுவ வீரர்களுக்கு இடையே பரஸ்பரம் நட்புறவு மற்றும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்திய ராணுவத்தின் 45 வீரர்கள் கொண்ட படைப்பிரிவு இரண்டு வாரம் நடைபெற்ற இந்த பயிற்சியில் சிறப்பாக செயலாற்றியதாகவும் திரு ராஜேஷ்குமார் சிங் தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

ஈரான் மீதான தாக்குதலை இஸ்ரேல் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு தீவிரப்படுத்தியுள்ளது.

அந்நாட்டின் அணு ஆயுத அமைப்புகள், ஏவுகணை தொழிற்சாலைகள் மற்றும் மூத்த ராணுவ அதிகாரிகளை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் எல்லைப்பகுதிக்குள் ஈரான் 100-க்கும் மேற்பட்ட ட்ரோன்களை அனுப்பி தாக்குதல் நடத்த முற்பட்டதாகவும், 200-க்கும் மேற்பட்ட ஜெட் விமானங்களை கொண்டு இஸ்ரேலிய ராணுவம் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் இஸ்லாமிக் புரட்சிப்படைத் தளபதி ஜென்ரல் **'Hossein Salami'**-யும், அணுசக்தி முன்னாள் தலைவர் முகமது **'Vagheri** –யும் இந்த தாக்குதலின்போது கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் யுரேனிய தொழிற்சாலைகள் மீதும், அணுசக்தி விஞ்ஞானிகள் மீதும் குறிவைத்து தாக்குதல் நடத்தப்படதாகவும் இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலால் ஈரானில் உள்ள அணு கட்டமைப்புகளிலிருந்து கதிர் வீச்சு எதுவும் ஏற்படவில்லை என்று சர்வதேச அணுசக்தி முகமை தெரிவித்துள்ளது.

டெக்ரான் நகரத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் உயிரிழந்ததாக அந்நாட்டின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றிபெற 282 ரன் என்ற இலக்கை ஆஸ்திரேலியா நிர்ணயித்துள்ளது.

லண்டன் லாட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மூன்றாவது நாளான இன்று தென்னாப்பிரிக்கா தனது இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்பிற்கு 76 ரன் எடுத்துள்ளது.

ஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்சில் 207 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் ஆசிய இளையோர் மற்றும் 23 வயதுக்கு உட்பட்டோருக்கான சாம்பியன்ஷிப் படகு போட்டியில் இந்தியா நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<<END>>>>>